(13)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## திண்டுக்கல் மாவட்டம்

## 1432-ம் பசலி மஞ்சள் கலர் துணி பிடிப்பை (சிறியது) சப்ளைக்கான - ஒப்பந்தப்புள்ளி படிவம்

பசலி 1432க்கு 01.07.2022 முதல் 30.6.2023 முடிய உண்டான காலத்திற்கு **24.06.2022ம் தேதி பிற்பகல் 1.00 மணிக்குள்** கொடுக்க வேண்டிய ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

| வரிசை எண் | சப்ளை செய்யப்படவுள்ள இனத்தின் முழு விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும் ( அனைத்து வரிகள் உள்பட ) ரூ. பை |
|---|---|---|
| 1 | மஞ்சள் கலர் துணியினால் தைக்கப்பட்ட பிடிப்பை ஒன்றுக்கு விலை (சிறியது) | |

குறிப்பு.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு அறிந்தவராகவே கருதப்படுவர்.
2. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் இனத்திற்கென குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத்தொகையை வங்கி வரைவோலையாக பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
3. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது அதற்கு நிகரான தொகைக்கு வங்கி வரைவோலை இணைப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். சால்வன்சி / வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை **(PAN CARD)** நகல் GST சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம்
(முழு விலாசம் அலைபேசி எண்ணுடன்)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

1432-ம் பசலிக்கு பஞ்சாமிர்தம் கொள்முதல் செய்யும் பக்தர்களுக்கு பஞ்சாமிர்தம் எடுத்துச்செல்லும் வகையில் மஞ்சள் கலர் பிடிப்பை (சிறியது) சப்ளை செய்தல்

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் 01.07.2022 முதல் 30.6.2023 முடியவுள்ள காலமான 1432-ம் பசலிக்கு இத்திருக்கோயிலில் தயாரிக்கப்படும் பஞ்சாமிர்தம் கொள்முதல் செய்யும் பக்தர்களுக்கு பஞ்சாமிர்தம் எடுத்துச் செல்லும் வகையில் மஞ்சள் கலர் பிடிப்பை சப்ளை செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் **24.06.2022ம் தேதி பிற்பகல் 1.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **24.06.2022ம் தேதி பிற்பகல் 3.00 மணி** அளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற நபர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**சப்ளை செய்யப்பட வேண்டிய இனத்தின் விவரம்**

இத்திருக்கோயிலில் தயாரிக்கப்படும் பஞ்சாமிர்தம் கொள்முதல் செய்யும் பக்தர்களுக்கு பஞ்சாமிர்தம் எடுத்துச் செல்லும் வகையில் மஞ்சள் கலர் பிடிப்பை சப்ளை செய்தல்

**விலை குறிப்பிடுவதற்கான விவரம்**

ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் விற்பனை வரி, வருமான வரி, GST வரி மற்றும் இதர வரிகள் உட்பட பை ஒன்றுக்கு விலை விபரம் குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி தொகையினை எண் மற்றும் எழுத்தால் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**சப்ளை செய்ய வேண்டிய பையின் அளவுமற்றும் இதர விபரங்கள்**

**சிறியது**

**பையின் அகலம் அளவு** 10″x12″ உயரம்
**பையின் தடிமன்** 20'S x 20'S காடா துணி (ரீத் பிக் 52/42)
**பையின் நிறம்** / மஞ்சள் கலர் பிடிப்பை
**கைப்பிடி விவரம்**. கைப்பிடி மடக்கி தைக்கப்பட்டு இருக்கவேண்டும்
கைப்பிடிஇடைவெளி நீளம் 2 ½ ″ அகலம் 3/4 ″ இருக்கவேண்டும்
பையின் மேல் பகுதியில் உள்புற மடிப்பு 1/2" இருக்க வேண்டும்
பையின் உயரம் மேல் பகுதியில் உள்புற மடிப்பு 1/2" தவிர்த்து 12" உயரம் இருக்க வேண்டும்

**பையில் உள்ள பிரிண்டிங் விவரம்.-**

1, 2 Colour Printing
2, இராஜ அலங்கார திருவுருவப்படம் இரண்டு நிறத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கண்ட விவரப்படியான பிரிண்டிங் விவரங்கள் பையின் இரண்டு பக்கங்களிலும் தெளிவாக அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

1 ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக ரூ.50,000/= (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பதவி பெயருக்கு பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையினை பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். வங்கிவரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2 ஒப்பந்தப்புள்ளிதாரது நிரந்தர கணக்கு எண் அட்டையின் நகல் மற்றும் GST சான்று நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் (PAN CARD) கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3 ஒப்பந்தப்புள்ளிதாரர் 1432-ம் பசலி முழுவதும் சப்ளை செய்வதாக இருக்கும் விவரப்படியான மஞ்சள் கலர் பிடிப்பை ஒன்று மட்டும் மாதிரிக்காக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மாதிரி இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4 மேற்காணும் வரிசை எண்.1 முதல் 3 வரை உள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாது இணைத்து கொடுக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

5 ஒப்பந்ததாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

6 ஒப்பந்தப்புள்ளியில் தெளிவாக ஒப்பந்தப்புள்ளிதாரரின் முழு முகவரி குறிப்பிடப்பட வேண்டும்.

7 ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் வங்கி வரைவோலை விவரம், அடங்கிய பட்டியல் இணைக்க வேண்டும்.

8 ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் சப்ளை செய்வதாகக் குறிப்பிட்டுள்ள பொருளின் விபரத்தை ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் குறிப்பிட வேண்டும்.

9 ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் "பெறுநர்" என்ற இடத்தில் "இணை ஆணையர் / செயல் அலுவலர்", அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி " என்ற முகவரி குறிப்பிடப்பட வேண்டும்.

10 ஒப்பந்தப்புள்ளிதாரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயில் நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனது சொந்த செலவில் உடன் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்தான ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

11 பஞ்சாமிர்த விற்பனைப்பிரிவு பொறுப்பாளரிடம் அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளிதாரரே நேரில் கொள்முதல் கேட்பு சீட்டு பெற்றுக்கொண்டு, கொள்முதல் கேட்பு சீட்டிலுள்ள விவரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மாதிரிப்படியே தங்கு தடையின்றி பைகளை சப்ளை செய்ய வேண்டும்.

12 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் மேற்படி மஞ்சள் கலர் பிடிப்பை நல்ல தரமானதாக இருக்க வேண்டும்.

13 ஐயப்ப சீசன் "தைப்பூசம்", "பங்குனி உத்திரம்", முதலிய விசேட காலங்கள் மற்றும் பக்தர்கள் அதிகமாக வரும் காலங்களில் அதிகமான அளவு தேவைப்பட்டியல்படி தங்கு தடையின்றி தரமான மேற்படி மஞ்சள் கலர் பிடிப்பை குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தப்புள்ளியில் இணைத்திருந்த மாதிரிப்படியே சப்ளை செய்ய வேண்டும்.

/3/

14 பஞ்சாமிர்த விற்பனைப்பிரிவிற்கு ஒப்பந்தப்புள்ளிதாரால் கொண்டு செல்லப்படும் மஞ்சள் கலர் பிடிப்பை பஞ்சாமிர்த விற்பனைப்பிரிவு பொறுப்பாளரால் நன்றாக பரிசோதிக்கப்பட்டு அவைகளின் தரம் நன்றாக இருப்பதாக பிரிவுப் பொறுப்பாளர் ஏற்றுக்கொண்டால் உடன் அவர்கள் முன்னிலையில் எண்ணிக்காண்பித்து வழங்கப்பட வேண்டும். வரப்பெற்ற பைகள் விற்பனை செய்ய தகுதியற்றவை என்று கண்டறியப்படும் பொழுது பைகளின் எண்ணிக்கைக்கு சமமான தரமான மஞ்சள் கலர் பிடிப்பை தொகை ஏதும் கோராமல் ஒப்பந்தப்புள்ளிதாரர் வழங்க வேண்டும். தவறினால் தகுதியற்ற மஞ்சள் கலர் பிடிப்பைகளின் தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

15 ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தப்புள்ளியை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்ஒப்பந்தம் விடவோ கூடாது.

16 ஒப்பந்தப்புள்ளிதாரர் திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும், நடைமுறைகளுக்கும் சென்னை இந்து சமய அறநிலையத்துறை, சட்ட திட்டங்களுக்குட்பட்டு சப்ளை செய்ய வேண்டும்.

17 மஞ்சள் கலர் பிடிப்பை தேவைப்பட்டியல்படி தேவையான காலங்களில் தேவைக்கேற்ப சப்ளை செய்யாவிட்டாலோ அல்லது ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்படி நடந்து கொள்ளாவிட்டாலோ ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும்.

18 இதனால், திருக்கோயிலுக்குத் தேவையான மேற்படி மஞ்சள் கலர் பிடிப்பை வெளி மார்க்கெட்டிலோ அல்லது விலைப்புள்ளிகள் பெற்றோ அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமோ கொள்முதல் செய்யப்படும்.

19 மேலும் இதனால் திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் அதற்கு முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே பொறுப்பாக்கப்பட்டு இந்த இழப்புத்தெகையினை முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். தவறினால், கோர்ட் மூலம் கோர்ட் செலவுடன் வட்டியுடன் சேர்த்து வசூலிக்கப்படும். மேலும் ஒப்பந்ததாரர் பெயர் கருப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.

20 எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

21 ஒப்பந்தப்புள்ளி சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்.

22 ஒப்பந்தப்புள்ளிதாரரால் மஞ்சள் கலர் பிடிப்பை சப்ளை செய்வதில் இயற்கையாகவோ அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் இடையூறு ஏற்பட்டால் அதற்கு திருக்கோயில் நிர்வாகம் ஏதும் பொறுப்பேற்காது.

23 சப்ளை செய்யப்படும் மஞ்சள் கலர் பிடிப்பைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் பட்டியல் ஒவ்வொன்றிலும் 10% வீதம் பிடித்தம் செய்து கொண்டு மீதத்தொகை வழங்கப்படும். பசலி முழுவதும் பிடித்தம் செய்த தொகை பசலி முடிந்தவுடன் ஒப்பந்தப்புள்ளிதாரரால் திருக்கோயிலுக்கு ஏதும் இழப்பேற்பட்டதா? என பரிசீலனை செய்து, இழப்பேற்பட்டிருப்பின் அத்தொகையினைப் பிடித்தம் செய்து கொண்டு மீதத்தொகையினை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். இழப்பேற்படாவிடில் பிடித்தம் செய்துள்ள தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

24 மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஆணையரால் அங்கீகரிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினைத் தவிர மற்றவர்களுக்கு வைப்புத் தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

25 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைப் பரிசீலித்து சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரால் ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு அனுமதி வழங்கப்படும் வரை வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய டெபாசிட் தொகைக்கான வங்கி வரைவோலை திரும்ப வழங்கப்படமாட்டாது.

26 1432-ம் பசலி தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று, அதில் மஞ்சள் கலர் பிடிப்பைகள் கொள்முதல் செய்த வகையில் தணிக்கை ஆட்சேபணை ஏதுமில்லையென்று அறிவித்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்தியுள்ள ஒப்பந்த வைப்புத்தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின், அதனை பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

27 ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மீறப்பட்டாலோ அல்லது நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

28 ஒப்பந்தப்புள்ளிதாரர் வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலிலும் வருமானவரி, விற்பனை வரி மற்றும் இதர வரிகளை பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

29 ஒப்பந்தப்புள்ளி சப்ளை செய்யப்படும் காலத்தில் வரி விகிதங்களில் மாறுதல் ஏற்பட்டாலும், ஒப்பந்தப்புள்ளி தொகைக்கே ஒப்பந்தக்காலம் முடியும் வரை ஒப்பந்தப்புள்ளிதாரர் சப்ளை செய்ய வேண்டும்.

30 மது அல்லது லாகிரி வஸ்துக்கள் அருந்தியவர்களையோ, இந்துக்கள் அல்லாதவர்களையோ ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். 21 வயது பூர்த்தி அடையாதவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்க மாட்டார்கள்.

31 ஒப்பந்தப்புள்ளி தேதி, நேரம் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் மாற்றியமைக்க இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கிடையாது.

32 திருக்கோயில் பழக்க வழங்கங்கள் நடைமுறைகளுக்கு விரோதமாக உரிம ஏலங்களை துய்க்க கூடாது. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நன்கு அறிந்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதாக கருதப்படும்.

33 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433 பசலி டெண்டர் கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே விலைக்கு தொடர்ந்து வெள்ளை கலர் பிடிப்பைகளை சப்ளை செய்ய வேண்டும்.

34 திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுபவர்கள் திருக்கோயிலுக்கு செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக்கட்டணம் நிலுவை வைத்துள்ளவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்தவர்கள் மற்றும் வாரிசுதாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

35 டெண்டர் முடிவு செய்த பின் கூறப்படும் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் திறப்பின் போது ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களால் கூறப்படும் முடிவே இறுதியானது.

36 ஒருவர் கொடுத்த டெண்டர் விலை குறைவாக இருந்தபோதிலும் ஒழுங்காக சப்ளை செய்ய மாட்டார் என்று இணை ஆணையர்/செயல் அலுவலர் கருதினால் மேற்படி டெண்டரை நிராகரிக்க இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுக்கு பூர்ண உரிமை உண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

37 இதர நிபந்தனைகள் டெண்டர் திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

30/5/2022
மேலாளர்
30/5/22

(13)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## திண்டுக்கல் மாவட்டம்

## 1432-ம் பசலி மஞ்சள் கலர் துணி பிடிப்பை (பெரியது) சப்ளைக்கான - ஒப்பந்தப்புள்ளி படிவம்

பசலி 1432க்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உண்டான காலத்திற்கு **24.06.2022ம் தேதி பிற்பகல் 1.00 மணிக்குள்** கொடுக்க வேண்டிய ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

| வரிசை எண் | சப்ளை செய்யப்படவுள்ள இனத்தின் முழு விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும் ( அனைத்து வரிகள் உள்பட ) ரூ. பை |
|---|---|---|
| 1 | மஞ்சள் கலர் துணியினால் தைக்கப்பட்ட பிடிப்பை ஒன்றுக்கு விலை (பெரியது) | |

குறிப்பு.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு அறிந்தவராகவே கருதப்படுவர்.
2. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் இனத்திற்கென குறிக்கப்பட்டுள்ள வைப்புத்தொகையை வங்கி வரைவோலையாக பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
3. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது அதற்கு நிகரான தொகைக்கு வங்கி வரைவோலை இணைப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். சால்வன்சி / வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (**PAN CARD**) நகல் GST வரி மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம்
(முழு விலாசத்துடன்)

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்.

1 ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக ரூ.1,00,000/= (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பதவி பெயருக்கு பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையினை பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். வங்கிவரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2 ஒப்பந்தப்புள்ளிதாரரது நிரந்தர கணக்கு எண் அட்டையின் (PAN CARD) & GST நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3 மேற்காணும் வரிசை எண்.1 முதல் 2 வரை உள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாது இணைத்து கொடுக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

4 ஒப்பந்ததாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

5 ஒப்பந்தப்புள்ளிதாரர் 1432-ம் பசலி முழுவதும் மேற்கண்ட அளவு விவரப்படி சப்ளை செய்வதாக இருக்கும் துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை ஒன்று மாதிரிக்காக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மாதிரி இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6 ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் சப்ளை செய்வதாகக் குறிப்பிட்டுள்ள பொருளின் விபரத்தை ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் குறிப்பிட வேண்டும்.

7 ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் "பெறுநர்" என்ற இடத்தில் " இணை ஆணையர்/ செயல் அலுவலர்", அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி " என்ற முகவரி குறிப்பிடப்பட வேண்டும்.

8 ஒப்பந்தப்புள்ளிதாரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயில் நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனது சொந்த செலவில் உடன் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்தான ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

9 தங்கரதப்பிரிவு கண்காணிப்பாளரிடம் அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளிதாரரே நேரில் கொள்முதல் கேட்பு சீட்டு பெற்றுக்கொண்டு, கொள்முதல் கேட்பு சீட்டிலுள்ள விவரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மாதிரிப்படியே தங்கு தடையின்றி மேற்படி பைகளை சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால், திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிமார்க்கெட்டில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால், ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும். மற்றும் திருக்கோயிலால் பிடித்தம் செய்யப்பட்ட 10% பில் தொகையிலிருந்தும், வைப்பு தொகையிலிருந்தும் மற்றும் பட்டியல் தொகையிலிருந்தும் மேற்படி இழப்பு தொகை பிடித்தம் செய்யப்படும்.

10 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் மேற்படி துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை நல்ல தரமானதாக இருக்க வேண்டும்.

7/3/

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

## 1432-ம் பசலிக்கு தங்கரத உபயதாரர்களுக்கு இத்திருக்கோயில் பிரசாதங்களை வழங்குவதற்கு தேவையான துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை (பெரியது) சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு 1432-ம் பசலிக்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய இத்திருக்கோயில் தங்கரத உபயதாரர்களுக்கு வழங்கப்படும் பிரசாதங்களை வழங்குவதற்குத் தேவையான துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை சப்ளை செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் **24.06.2022 தேதி பிற்பகல் 1.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **24.06.2022-ம் தேதி பிற்பகல் 3.00 மணியளவில்** ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற நபர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**சப்ளை செய்யப்பட வேண்டிய இனத்தின் விவரம்**

இத்திருக்கோயில் தங்கரத உபயதாரர்களுக்கு வழங்கப்படும் பிரசாதங்களை வழங்குவதற்குத் தேவையான துணியினால் தைக்கப்பட்ட வெள்ளை கலர் பிடிப்பை சப்ளை செய்தல்.

**விலை குறிப்பிடுவதற்கான விபரம்**

துணியினால் தைக்கப்பட்ட வெள்ளை கலர் பிடிப்பை ஒன்றுக்கு விலை குறிப்பிட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் விற்பனை வரி, வருமான வரி, GST வரி மற்றும் இதர வரிகள் உட்பட பை ஒன்றுக்கு விலை விபரம் குறிப்பிட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளியில் தெளிவாக ஒப்பந்தப்புள்ளிதாரரின் முழு முகவரி குறிப்பிடப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் வங்கி வரைவோலை விவரம், சால்வன்சி விவரம் அடங்கிய பட்டியல் இணைக்க வேண்டும்.

**சப்ளை செய்யப்பட வேண்டிய துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை பை அளவு விவரம்**

பெரியது

அ) பையின் அளவு 12"x16",
அளவு பாலம் 4"
பையின் நிறம் - மஞ்சள் கலர் பிடிப்பை
பையின் தடிமன் 20'S x 20'S காடா துணி (ரீத் பிக் 52/42

**கைப்பிடி விவரம்**. கைப்பிடி மடக்கி தைக்கப்பட்டு இருக்கவேண்டும்
கைப்பிடிஇடைவெளி நீளம் 2 ½ " அகலம் 3/4 " இருக்கவேண்டும்
பையின் மேல் பகுதியில் உள்புற மடிப்பு 1/2" இருக்க வேண்டும்
பையின் உயரம் மேல் பகுதியில் உள்புற மடிப்பு 1/2" தவிர்த்து 12" உயரம் இருக்க வேண்டும்

**பையில் உள்ள பிரிண்டிங் விவரம்.-**

1, 2 Colours Printing
2, இராஜ அலங்கார திருவுருவப்படம் இரண்டு நிறத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

/2/

11 "ஐயப்ப சீசன், தைப்பூசம்", "பங்குனி உத்திரம்", முதலிய விசேஷ காலங்கள் மற்றும் பக்தர்கள் அதிகமாக வரும் காலங்களில் அதிகமான அளவு தேவைப்பட்டியல்படி தங்கு தடையின்றி தரமான மேற்படி துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தப்புள்ளியில் இணைத்திருந்த மாதிரிப்படியே சப்ளை செய்ய வேண்டும்.

12 .ஒப்பந்தப்புள்ளிதாரால் சப்ளை செய்யப்படும் துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை தங்கரதப்பிரிவு கண்காணிப்பாளரால் நன்றாக பரிசோதிக்கப்பட்டு அவைகளின் தரம் நன்றாக இருப்பதாக பிரிவுப் பொறுப்பாளர் ஏற்றுக்கொண்டால் உடன் அவர்கள் முன்னிலையில் எண்ணிக்காண்பித்து வழங்கப்பட வேண்டும். வரப்பெற்ற பைகள் பயன்படுத்த தகுதியற்றவை என்று கண்டறியப்படும் பொழுது பைகளின் எண்ணிக்கைக்கு சமமான தரமான துணியினால் தைக்கப்பட்ட கட்டை பை தொகை ஏதும் கோராமல் ஒப்பந்தப்புள்ளிதாரர் வழங்க வேண்டும். தவறினால் தகுதியற்ற துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பைகளின் தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

13 ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தப்புள்ளியை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்ஒப்பந்தம் விடவோ கூடாது.

14 ஒப்பந்தப்புள்ளிதாரர் திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும், நடைமுறைகளுக்கும் சென்னை இந்து சமய அறநிலையத்துறை, சட்ட திட்டங்களுக்குட்பட்டு சப்ளை செய்ய வேண்டும்.

15 துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை தேவைப்பட்டியல்படி தேவையான காலங்களில் தேவைக்கேற்ப சப்ளை செய்யாவிட்டாலோ அல்லது ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்படி நடந்து கொள்ளாவிட்டாலோ ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும். மேலும் ஒப்பந்ததாரர் பெயர் கருப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.

16 இதனால், திருக்கோயிலுக்குத் தேவையான மேற்படி துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை வெளி சந்தையிலோ அல்லது விலைப்புள்ளிகள் பெற்றோ அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமோ கொள்முதல் செய்யப்படும்.

17 மேலும் இதனால் திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் அதற்கு முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே பொறுப்பாக்கப்பட்டு இந்த இழப்புத்தெகையினை முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். தவறினால், கோர்ட் மூலம் கோர்ட் செலவுடன் வட்டியுடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

18 எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

19 ஒப்பந்தப்புள்ளி சென்னை, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்.

20 ஒப்பந்தப்புள்ளிதாரரால் துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பை சப்ளை செய்வதில் இயற்கையாகவோ அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் இடையூறு ஏற்பட்டால் அதற்கு திருக்கோயில் நிர்வாகம் ஏதும் பொறுப்பேற்காது.

21 சப்ளை செய்யப்படும் துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் பட்டியல் ஒவ்வொன்றிலும் 10% வீதம் பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகை வழங்கப்படும். பசலி முழுவதும் பிடித்தம் செய்த தொகை பசலி முடிந்தவுடன் ஒப்பந்தப்புள்ளிதாரரால் திருக்கோயிலுக்கு ஏதும் இழப்பேற்பட்டதா? என பரிசீலனை செய்து, இழப்பேற்பட்டிருப்பின் அத்தொகையினைப் பிடித்தம் செய்து கொண்டு மீதத்தொகையினை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். இழப்பேற்படாவிடில் பிடித்தம் செய்துள்ள தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

22 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைப் பரிசீலித்து சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரால் ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு அனுமதி வழங்கப்படும் வரை வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய டெபாசிட் தொகைக்கான வங்கி வரைவோலை திரும்ப வழங்கப்படமாட்டாது.

23 மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஆணையரால் அங்கீகரிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினைத் தவிர மற்றவர்களுக்கு வைப்புத் தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

24 1432-ம் பசலி தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று, அதில் துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பைகள் கொள்முதல் செய்த வகையில் தணிக்கை ஆட்சேபணை ஏதுமில்லையென்று அறிவித்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்தியுள்ள ஒப்பந்த வைப்புத்தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின் , அதனை பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

25 ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மீறப்பட்டாலோ அல்லது நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

26 ஒப்பந்தப்புள்ளிதாரர் வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலிலும் வருமானவரி, விற்பனை வரி மற்றும் இதர வரிகளை பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

27 ஒப்பந்தப்புள்ளி சப்ளை செய்யப்படும் காலத்தில் வரி விகிதங்களில் மாறுதல் ஏற்பட்டாலும், ஒப்பந்தப்புள்ளி தொகைக்கே ஒப்பந்தக்காலம் முடியும் வரை ஒப்பந்தப்புள்ளிதாரர் சப்ளை செய்ய வேண்டும்.

28 மது அல்லது லாகிரி வஸ்துக்கள் அருந்தியவர்களையோ, இந்துக்கள் அல்லாதவர்களையோ ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். 21 வயது பூர்த்தி அடையாதவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்க மாட்டார்கள்.

29 ஒப்பந்தப்புள்ளி தேதி, நேரம் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் மாற்றியமைக்க இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கிடையாது.

30 திருக்கோயில் பழக்க வழங்கங்கள் நடைமுறைகளுக்கு விரோதமாக உரிம ஏலங்களை துய்க்க கூடாது. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நன்கு அறிந்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதாக கருதப்படும்.

31 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரா் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433 பசலி டெண்டர் கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே விலைக்கு தொடர்ந்து துணியினால் தைக்கப்பட்ட மஞ்சள் கலர் பிடிப்பைகளை சப்ளை செய்ய வேண்டும்.

32 திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுவபவர்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்தவர்கள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

33 டெண்டர் முடிவு செய்த பின் கூறப்படும் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் திறப்பின் போது ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களால் கூறப்படும் முடிவே இறுதியானது.

34 ஒருவர் கொடுத்த டெண்டர் விலை குறைவாக இருந்தபோதிலும் ஒழுங்காக சப்ளை செய்ய மாட்டார் என்று இணை ஆணையர்/செயல் அலுவலர் கருதினால் மேற்படி டெண்டரை நிராகரிக்க இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுக்கு பூர்ண உரிமை உண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

35 இதர நிபந்தனைகள் டெண்டர் திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

30/5/2022
மேலாளர்

30/5/22